1973 பிப்ரவரி 10]

திரு. எஸ். வடிவேல் : பொதுப்பணித் துறையில் உள்ள கடைநிலை ஊழியர்களுக்கு மற்றத் துறைகளிலுள்ளவர்களைப் போல் பதவி உயர்வு இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தத் துறையிலும் பதவி உயர்வுக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் துறையிலே சில பதவிகளுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு இல்லாமல் இருக்கலாம். இப்போதைய பிரச்சனை ஏற்கெனவே இருக்கும் இடங்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது. அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவு அச்சகங்கள்

*115 வினு—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1972 ஆம் ஆண்டு, மார்ச் முடிய நமது மாநிலத்தில் கூட்டுறவு முறையில் இயங்கக் கூடிய அச்சகங்கள் எத்தனை உள்ளன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : பதினுன்கு கூட்டுறவு அச்சகங்கள் தமிழகத்தில் உள்ளன.

திரு. என். கிட்டப்பா : இந்தக் கூட்டுறவு அச்சகங்கள் தமிழகத்தில் எந்த எந்த ஊர்களில் இயங்குகின்றன என்பதையும், புதியதாக கூட்டுறவு முறையில் கூட்டுறவு அச்சகங்கள் துவக்கினுல் அவற்றிற்கு அளிக்கக் கூடிய உதவிகளையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : சென்னையில் 2 கூட்டுறவு அச்சகங்கள் இருக்கின்றன. தர்மபுரி மாவட்டத்தில்தான் இல்லை. மற்ற எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒன்று இருக்கிறது. அடுத்து, அரசாங்கம் பங்குத்தொகையும் கொடுக்கிறது, கடன் தொகையும் கொடுக்கிறது.

திரு. என். கிட்டப்பா : அமைச்சர் அவர்கள் பங்குத் தொகையும், கடன் தொகையும் அளித்து வருவதாகச் சொன்னுர்கள். என்ன விகிதாசாரத்தில் அளிக்கிருர்கள் என்பதைத் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இதற்கு உச்சவரம்பு இல்லை. தேவைக்குத் தகுந்தபடி கொடுத்து வருகிறேம்.

திரு. மா. சுப்பிரமணியம் : மாவட்டத் தலைநகரங்களில் மட்டும்தான் இந்தக் கூட்டுறவு அச்சகங்கள் அமைக்கப்படுகின்றனவா ? அல்லது கேட்கிற இடங்களில் எல்லாம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பொதுவாக மாவட்டத் தலைநகரங்களில்தான் கூட்டுறவு அச்சகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. திருச்சி மாவட்டத்தில் மட்டும் கூட்டுறவு அச்சகம் புதுக்கோட்டையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

Supply of fertilisers.

* 116 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Food be pleased to state the total quantum of fertilisers consumed by the farmers of Tamil Nadu during 1971–72?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 1971-72-ல் இம்மாநிலத்தில் பயன்படுத்தப்பட்ட உரத்தின் மொத்த அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

உரத்தின் பெயர்.	டன்.
நைட்ரஜன் உரம்	2,14,475
பாஸ்பேட் உரம்	71,586
பொட்டாஷியம் உரம்	61,137

DR. H. V. HANDE: Sir, the Hon. Minister has given particulars regarding the quantity consumed. May I know the details of the quantity targeted originally by the department concerned and whether the farmers have complained to the Government that they do not get adequate supply of fertilisers. Also, whether in the Zonal Conference held on the 5th and 6th May, the Government officials have asked the Central Government to step up the quantity of fertilisers to be supplied to this State in view of the heavy demand from the farmers?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உரத்தைப் பொறுத்த வரை நம்முடைய மாநிலத்தின் டிமாண்டு—

உரத்தின் பெயர்.	டன்.
நைட்டிரஜன் உரம்	2,84,000
பாஸ்பேட் உரம்	91,000
பொட்டாஷ் உரம்	75,000

மற்ற விவரங்களுக்குத் தகவல் இல்லை.

DR. H. V. HANDE: Sir, in view of the fact that more fertiliser is being required by the farmers of Tamil Nadu and in view of the shortage of fertilisers, have this Government got